உ

கடவுள் துணை.

கண்ணாட்டிச்சிந்து.



சென்னை:

சக்கரவர்த்தி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1915

நெ. 13, நம்புலையர் தெருவு,—மதராஸ்.

விளம்பரம்.

இராமர் அஸ்வமேதயாகம் படம்	1	8	0
அராபிக்கதை	2	0	0
நீதிநெறி அரிச்சந்திரநாடகம்	1	8	0
சிவகாமி அரிச்சந்திரநாடகம்	1	0	0
மேகவர்ணன் இது ஒருபுதிய கதை	0	8	0
சுந்தரிமனோகரன்	0	12	0
குலசேகரன்	0	10	0
நித்தியாநந்தன்	0	5	0
மதாலஸா	0	3	0
படம்போட்ட வனவாசம் திக்கு	0	8	0
விக்கிரமாதித்தன்கதை	0	8	0
நளச்சக்கிரவர்த்திகதை	0	4	0
மதனகாமராஜன்கதை	0	4	0
விவேகசாகரக்கதை	0	4	0
மயிலிராவணன்கதை	0	3	0
குலேப்பகாவல்கதை	0	4	0
சார்தர்வேஸ்கதை	0	6	0
முப்பத்திரண்டுபதுமைகதை	0	4	0
தேசிங்குராஜன்கதை	0	4	0
நல்லதங்காள்கதை	0	3	0
பவழக்கொடிமாலை	0	4	0
பெரியயெழுத்து சுந்தரிமாலை படம்	0	6	0

சக்கரவர்த்தி அண்டு கம்பெனி
போஸ்டு பாக்ஸ் நெ. 198
மதராஸ்.

உ

கடவுள் துணை.

கண்ணாடிச் சிந்து.

வெண்பா.

விண்ணாடரேத்தரிய வேலவன்மேல் வையமிசை
கண்ணாடிச்சிந்தாகக் கழறுதற்குத்-தண்ணாருஞ்
சோலைதிகழுந்தணிகை சுந்தரவிநாயகன்பொற்
றாளைவணங்கிச் சாற்றுவாம்.

நூன்முகம்.

சிந்து.

இந்துவாழ் சுந்தரனார் தந்தவொய்யாரன்
  கண்ணாடி-தந்தவொய்யாரன்
செந்தணிகை வாழ்செங்கல்வ ராயகெம்பீரன்
  கண்ணாடி ராயகெம்பீரன். 1

பச்சைமயி லேறிவரு முச்சிதவேலன்
  கண்ணாடி-உச்சிதவேலன்
இச்சையுடன் போற்றுபவர்க் கீந்திடுஞ்சீலன்
  கண்ணாடி-யீந்திடுஞ்சீலன் 2

கானக்குற வள்ளிமகிழ் கடம்பணிதோளன்
கண்ணாட்டி-கடம்பணிதோளன்
வானவரிடர்தவிர்த்தே வயங்குந்தயாளன்
கண்ணாட்டி-வயங்குந்தயாளன். 3

தெய்வகுஞ்சரிமகிழுஞ்செங்கதிர்வேலன்
கண்ணாட்டி-செங்கதிர்வேலன்
சைவமறையோனெனவுஞ் சாற்றுஞ்சுசீலன்
கண்ணாட்டி-சாற்றுஞ்சுசீலன். 4

ஒன்னலர்புரமெரித்தோ னுதவியபாலன்
கண்ணாட்டி-யுதவியபாலன்
தன்னிகரில்லாதகொடுந் தானவர்காலன்
கண்ணாட்டி-தானவர்காலன் 5

ஆணிப்பொன்னே ரத்தினமே ஆசைக்கிளியே
கண்ணாட்டி-ஆசைக்கிளியே
மாணிக்கமேமாங்குயிலே வார்த்தையைக்கேளடி
கண்ணாட்டி-வார்த்தையைக்கேளடி. 6

சித்தர்முத்தர் பத்தர்பணி சேவற்கொடியோன்
கண்ணாட்டி சேவற்கொடியோன்
வெத்திமயி லேறியேநம் வினைகள் தீர்ப்பவன்
கண்ணாட்டி-வினைகள் தீர்ப்பவன். 7

ரஞ்சிதஞ்சே ரஞ்சுகமே நங்கையேமானே
கண்ணாட்டி நங்கையேமானே
கொஞ்சுங்கிளியாளேநாமுங் கூடியேபோவோம்
கண்ணாட்டி கூடியேபோவோம். 8

ரத்தினபுலாக்குகம்மல் முகத்தில்மின்னுதே
கண்ணாட்டி முகத்தில்மின்னுதே
முத்துமாலைமோகனமுங் கழுத்திற்றன்னுதே
கண்ணாட்டி கழுத்திற்றன்னுதே 9

தங்கத்தினில்கல்லிழைத்த வங்கிதோடாவாம்
கண்ணாட்டி வங்கிதோடாவாம்
சங்கையில்லாமல்கரத்தில் தகதகென்னுதே
கண்ணாட்டி தகதகென்னுதே 10

பத்தரைமாற்றுதங்கத்தால் கைவளைகளாம்
கண்ணாட்டி கைவளைகளாம்
சித்திரவிசித்திரமொளிர் செம்பொன்மோதிரம்
கண்ணாட்டி செம்பொன்மோதிரம் 11

கல்லிழைத்தஒட்டியாண மிடையில்மின்னுதே
கண்ணாட்டி யிடையில்மின்னுதே
பல்லொளிகள்முத்தைப்போலே பளபளென்குதே
கண்ணாட்டி பளபளென்குதே 12

பாதமிரண்டில்சதங்கை கீதம்பாடுதே
கண்ணூட்டி கீதம்பாடுதே
சீதமதிமுகத்தைக்கண்டென் சித்தம்வாடுதே
கண்ணூட்டி சித்தம்வாடுதே 13

சுந்திரகாந்தசரிகைசேலை தளதளென்குதே
கண்ணூட்டி தளதளென்குதே
சுந்தரவடிவழகி சிந்தைசோருதே
கண்ணூட்டி சிந்தைசோருதே 14

நெத்தியில்திலர்தபொட்டு நிகநிகென்னுதே
கண்ணூட்டி நிகநிகென்னுதே
குத்தினிரவிக்கையது மெத்தஜொலிக்குதே
கண்ணூட்டி மெத்தஜொலிக்குதே 15

மல்லிகைமுல்லைமுடிக்கு மாங்குயிலாளே
கண்ணூட்டி மாங்குயிலாளே
வல்லியேநல்வல்வினைகள் தீர்ந்திடும்பாராய்
கண்ணூட்டி தீர்ந்திடும்பாராய் 16

சதுர்மறைபுகலுமிந்த சரவணப்பொய்கை
கண்ணூட்டி சரவணப்பொய்கை
விதியின்படியேயதனில் மூழ்குவோம்வாராய்
கண்ணூட்டி மூழ்குவோம்வாராய் 17

வேலவனைச்சேவைசெய்ய வினைகள் தீருமே
கண்ணாட்டி வினைகள் தீருமே
பாலசுப்ரமணியதேவன் பதங்கள் வாய்க்குமே
கண்ணாட்டி பதங்கள்வாய்க்குமே. 18

அணியணியாயிருக்குமன்ன சத்திரம்பாராய்
கண்ணாட்டி சத்திரம்பாராய்
பணிமணிகள்விற்குமிந்த பக்குவம்பாராய்
கண்ணாட்டி பக்குவம்பாராய். 19

வேதியர்கள்வேள்விசெய்யுஞ் சாலைகள்பாராய்
கண்ணாட்டி சாலைகள்பாராய்
சீதமலர்பூத்தொளிருஞ் சோலைகள்பாராய்
கண்ணாட்டி சோலைகள்பாராய். 20

ஆறுமுகம்பவனிவரும் அற்புதம்பாராய்
கண்ணாட்டி யற்புதம்பாராய்
வீறுசேர் முரசதிரும் விந்தையைத்தேராய்
கண்ணாட்டி விந்தையைத்தேராய் 21

அடியவர்கள்கூட்டமதை யன்னமேபாராய்
கண்ணாட்டி யன்னமேபாராய்
வடிவழகிகடைகளிதோ வழங்குதுசீராய்
கண்ணாட்டி வழங்குதுசீராய் 22

மனதின்படிவேணதெல்லாம் வாங்குவோம்வாராய்
கண்ணாட்டி வாங்குவோம்வாராய்
கனமுலவுங்கருங்குயிலே கவலையேன்கூறாய்
கண்ணாட்டி கவலையேன்கூறாய் 23
கார்த்திகையின்பெருமையதை கருதப்போகுமோ
கண்ணாட்டி கருதப்போகுமோ
நாற்றிசையோர்போற்றிசெய்யும் நன்கதைப்பாராய்
கண்ணாட்டி நன்கதைப்பாராய் 24
அன்பர்கள்துதித்திரங்கும் ஆனந்தம்பாராய்
கண்ணாட்டி ஆனந்தம்பாராய்
இன்மயிலேமனைக்கு ஏகுவோம்வாராய்
கண்ணாட்டி யேகுவோம்வாராய் 25
பத்தியுடன்கங்காதரன் பாடுந்தமிழ்க்கு
கண்ணாட்டி பாடுந்தமிழ்க்கு
சித்தமகிழ்ந்தேயருளுஞ் செங்கல்வராயன்
கண்ணாடி செங்கல்வராயன் 26
மாமலர்ப்பதங்கள்வாழி வண்மறைவாழி
கண்ணாட்டி வண்மறைவாழி
பூமியிலிதைப்பகரும் புண்ணியர்வாழி
கண்ணாட்டி புண்ணியர்வாழி. 27

கண்ணாட்டிச்சிந்து
முற்றிற்று.